# கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரியில் தொழில்நுட்ப போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு

பதிவு: மே 09, 2022 15:26 IST

அ+ அ-



*போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்ட காட்சி.*

*கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரியில் தொழில்நுட்ப போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.*

கோவில்பட்டி:

கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரி மற்றும் பெங்களூரு மிஸ்ட்ரல் சொல்யூஷன்ஸ் ஆகியவை இணைந்து நடத்தும் 'மிஸ்ட்ரல் ஹேக்பெஸ்ட் 2022' நிகழ்ச்சி தொடக்க விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கே.ஆர்.கல்வி நிறுவனங்களின் தாளாளர் கே.ஆர்.அருணாச்சலம் தலைமை தாங்கினார். கல்லூரி இயக்குனர் சண்முகவேல், முதல்வர் காளிதாச முருகவேல் மற்றும் துறைத்தலைவர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (டி.ஆர்.டி.ஓ) முன்னாள் தலைவர் மற்றும் சென்னை ஐ.ஐ.டி. மின்னியல் துறைப் பேராசிரியருமான கிறிஸ்டோபர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாவினை தொடங்கி வைத்தார்.

பெங்களூரு, மிஸ்ட்ரல் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தின் தலைமை தொழில்நுட்ப அதிகாரி ராஜீவ் ராமச்சந்திரா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார். இந்த நிகழ்வு தொழில்நுட்பத்துறை மற்றும் சமுதாயம் எதிர்கொள்கின்ற சவாலான நிஜ உலக பிரச்சினைகளை மின்னணு, மென்பொருள் மற்றும் எந்திர பொறியியல் துறைகளின் எதிர்கால தொழில்நுட்பங்களை பயன்படுத்தி எவ்வாறு தீர்வு காண்பது என்பதனை நோக்கமாக கொண்டு நடத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து சுமார் 75 மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியின் நிறைவு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. மின்னணு மற்றும் தொடர்பு பொறியியல் துறை உதவிப்பேராசிரியர் பிரசன்ன வெங்கடேசன் வரவேற்றார்.

கல்லூரி இயக்குனர் சண்முகவேல் வாழ்த்தி பேசினார். சிறப்பு விருந்தினர் கிறிஸ்டோபர், ஹேக்பெஸ்ட் போட்டிகளில் வெற்றி

பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி மாணவர்களிடம் உரையாற்றினார்.

முதல் பரிசு ரூ. 3 லட்சத்தை ஈரோடு கொங்கு பொறியியல் கல்லூரியை சேர்ந்த அஸ்வந்த், அத்வின் மற்றும் கோகுல் ராசன் ஆகிய மாணவர்கள் பெற்றனர். 2-வது பரிசு ரூ. 2½ லட்சத்தை பெங்களூரு இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி கல்லூரியை சேர்ந்த கிரண், நவீன் நடராஜ் மற்றும் மொகமத் ரெயான் கான் ஆகிய மாணவர்கள் பெற்றனர்.

3-வது பரிசு ரூ.1½ லட்சத்தை சென்னை கே.சி.ஜி. காலேஜ் ஆப் டெக்னாலஜி கல்லூரியை சேர்ந்த ஸ்ரீநபிஸா, ஷைக்அல்பாத் மற்றும் ஸ்ரீராம் ஆகிய மாணவர்கள் பெற்றனர். மின்னணு மற்றும் தொடர்பு பொறியியல் துறையின் மூன்றாம் ஆண்டு மாணவி சுபிட்ஷா நன்றி கூறினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி இயக்குனர், முதல்வர், மின்னணு மற்றும் தொடர்பு பொறியியல் துறைத் தலைவர் செண்பகவல்லி மற்றும் மிஸ்ட்ரல் நிர்வாகி களின் வழிகாட்டுதலின்படி துறை பேராசிரியர்கள் செய்திருந்தனர்.